செய்தி வெளியீடு எண்.800                                        நாள் : 18.09.2010

செய்தி வெளியீடு

# ஒகேனக்கல் குடிநீர் திட்டத்தின் நான்காம் தொகுப்பிற்க்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

--------

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட மற்றும் தரமான குடிநீர் வழங்குவதற்காக ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்பு திட்டம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் நிதி உதவியுடன் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலுள்ள 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 6755 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள மக்கள் பயன்பெறுவர். இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.1928.80 கோடி ஆகும்.

இத்திட்டத்தை செவ்வனே செயல்படுத்தும் வகையில் 5 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டுள்ளது. தொகுப்பு 1 மற்றும் 2 க்கான பணி உத்தரவு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

முதல் தொகுப்பில் தலைமையிடம், நீர் சுத்திகரிப்பு நிலையம், நீர் உந்து நிலையம், இயல்பு நீர் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீருந்துக் குழாய் – 11.5 கிமீ, பெரிய சமநிலை நீர்த் தேக்கத் தொட்டி, குடிநீர் விநியோக கண்காணிப்பு கட்டமைப்பு (SCADA) ஆகிய பணிகள் அடங்கும்.

இப்பணிக்கான உத்தரவு ஐ.வி.ஆர்.சி.எல், கடாகுவா ஒகேனக்கல் வாட்டர் ட்ரிட்மெண்ட் கம்பெனி(பி) லிமிடெட், ஹைதராபாத் நிறுவனத்திற்கு 19.2.2010ல் ரூ.237.19 கோடிக்கு வழங்கப்பட்டது.

இத்தொகுப்பின் கீழ், தலைமைப் பணியிடத்தில் தரைமட்டக்கிணறு, இறைப்பான் கிணறு, தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், இயல்பு நீர் கொண்டு செல்லும் நீருந்து குழாய் பணிகள், நீர் சுத்திகரிப்பு நிலைய பணிகள் மற்றும் மடத்தில் பெரிய சமநிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் ஆகஸ்டு 2012ல் முடிக்கப்படும் வகையில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாம் தொகுப்பில் மடம் என்ற இடத்தில் பெரிய சமநிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து ஊத்தங்கரை வரை 2105 கிமீ தூரம் பிரதான குழாய்கள் மற்றும் நீர் கடத்தும் குழாய்கள் மூலம் தர்மபுரி நகராட்சி, 5 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள (பென்னாகரம், நல்லாம்பள்ளி, தர்மபுரி, மாத்தூர் மற்றும் ஊத்தங்கரை) 1698 ஊரகக் குடியிருப்புகள், மற்றும் 2 பேரூராட்சிகளுக்கான (பென்னாகரம் மற்றும் ஊத்தங்கரை) குடிநீர் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. இத் தொகுப்பின் மூலம் 8.40 இலட்சம் மக்கள் பயன் பெறுவர்.

பணிக்கான உத்தரவு ஐ.வி.ஆர்.சி.எல், ஐதராபாத் நிறுவனத்திற்கு 2/7/2010ல் ரூ.315.03 கோடிக்கு. வழங்கப்பட்டுள்ளது.

இத்தொகுப்பின் கீழ் பெரிய சமநிலை நீர்த்தேக்கத் தொட்டி, மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள் , தரை மட்ட நீர் தேக்கத் தொட்டிகளின் கட்டுமானப் பணில் நடை பெற்று வருகிறது. இத்தொகுப்பின் கீழ் உள்ள பணிகள் அணைத்தும் ஜுன் 2012ல் முடிக்க திட்டமிடப்பட்டு, பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

நான்காம் தொகுப்பில் மூலம் ஒசூர் நகராட்சி, 5 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள (வேப்பனபள்ளி, கௌமங்களம், தலி, சூலகிரி மற்றும் ஒசூர்) 1631 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 3 பேரூராட்சிகளில் உள்ள (மத்தகிரி, கௌமங்களம், தென்கனிக்கோட்டை) 8.00 லட்சம் மக்கள் பயன் பெறுவர்.

**இதற்கான விலைப்புள்ளி பட்டியல் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து 16.9.10ல் ஒப்புதல் பெற்றப்பட்டு பணிக்கான உத்தரவு நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்_கம்பெனி லிமிடெட், ஹைதராபாத் நிறுவனத்திற்கு ரூ.387.54 கோடிக்கு 16.9.10 ல் வழங்கப்பட்டுள்ளது.**

இத்தொகுப்பின் கீழ் 74.40 கி.மீ. தூரத்திற்கு நீர் கொண்டு செல்லும் பிரதானக் குழாய்களும், 2759 கி.மீ. தூரத்திற்கு பிரிவு குழாய்களும் பெரிய சமநிலை நீர் தேக்கத் தொட்டி 188 எண்ணமும். தரைமட்ட தொட்டிகள் 172 எண்ணமும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் 146 எண்ணமும் பகிர்மானக் குழாய் 87 கி.மீ. தூரத்திற்கு அமைக்கப்பட உள்ளன. இத்தொகுப்பில் உள்ள அனைத்து பணிகளும் அக்டோபர் 2012 ல் முடிக்கும் வகையில் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

எஞ்சிய இரு தொகுப்புகளுக்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து 13.8.2010ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. முன் தகுதி பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 12.10.2010 அன்று இறுதி நாளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**